**25.08.2023 OS. 133/2015** வா.சா.3 – மந்தச்சாமி

<u>3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1ம் பிரதிவாதியை எனக்கு தெரியும். 2ம் பிரதிவாதி யார் என்று எனக்கு தெரியாது. கருத்தன்பட்டியில் 1ம் பிரதிவாதி வசித்து வருகிறார். வாதிகளை எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி அக்கா ஆவார், பூங்கோதை 1ம் வாதி தங்கை ஆவார். 2ம் வாதி பூங்கோதையின் மகன் ஆவார். 2ம் வாதி கருத்தன்பட்டியில் இருக்கிறார், அவர் எந்த ஊரில் பிறந்தார் என்று பிறப்புச்சான்றிதழ் எதுவும் பார்த்தேனா என்றால் இல்லை. மூக்காயி விஸ்வநாதனுக்கு சுமார் 30 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்து கொடுத்தார்கள். மேற்படியார்களின் திருமணம் மண்டபத்தில் தான் நடைபெற்றது. கோயிலில் நடைபெறவில்லை. என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் 2,3 பிரதிவாதிகள் யாருடைய வாரிசுகள் என்று நான் எதுவும் சொல்லவில்லை. மூக்காயிக்கும், விஸ்வநாதனுக்கும் 2 பெண்மக்கள் உள்ளார்கள். 1 பெண் திருக்கோஷ்டியூரிலும், மற்றொரு பெண் காட்டாந்தூர் அருகில் உள்ள கிராமத்தில் இருக்கிறார். 2 பெண்மக்களின் கணவர்கள் என்ன பணிபுரிகின்றனர் என்று எனக்கு தெரியாது. விஸ்வநாதனுக்கும், மூக்காயிக்கும் ஆண்மக்கள் இல்லாத நிலையில் தனது தங்கையான 1ம் வாதியை விஸ்வநாதனுக்கு 2ம் திருமணம் செய்து வைத்தார். மேற்படி 2ம் திருமணம் நடந்து சுமார் 25 வருடங்கள் இருக்கும். மேற்படி மூக்காயி, விஸ்வநாதனுக்கு 2ம் திருமணம் செய்வதற்கு முன் சம்மதப்பத்திரமோ, அல்லது விவாகரத்து பத்திரமோ எழுதி கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. விஸ்வநாதனுக்கு 2ம் திருமணம் செய்யப்பட்டபோது எழுதிக்கொள்ளப்பட்ட முச்சலிக்காவோ, அல்லது பத்திரிக்கையோ நான் எதுவும் பார்க்கவில்லை. மேற்படி 2ம் திருமணம் நடந்து 25 வருடங்கள் இருக்கும். நான் சிங்கப்பூர் சென்று வந்தேனா என்றால் 8 நாடுகள் சென்றுவந்தேன். நான் முதன்முதலில் சிங்கப்பூருக்கு எலெக்ட்ரிசன் வேலைக்காக சென்றேன். அது 1997ம் வருடம் ஆகும். நான் 1997 முதல் 2003 வரை சிங்கப்பூரில் தான் இருந்தேன். நான் சிங்கப்பூரில் பணிபுரிந்ததற்காக என்னுடைய பாஸ்போர்ட் மற்றும் பணிநியமனம் மற்றும் சம்பளபட்டியல்

எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விஸ்வநாதன் கோனார் சமுதாயம் ஆவார். நான் கள்ளர் சமுதாயத்தை சேர்ந்தவர். விஸ்வநாதன் கொத்தனார் வேலை பார்த்தார். கொத்தனார் வேலைக்கு சிங்கப்பூரில் எவ்வளவு சம்பளம் என்று எனக்கு தெரியாது. விஸ்வநாதன் வேலை பார்த்த பணத்தினை மற்றும் என்னுடைய சம்பளத்தினையும் வேறு நபர் மூலம் உண்டியல் பணமாக கொடுத்துவிடுவோம். விஸ்வநாதன் அங்குள்ள வெஸ்டர்ன் மணி டிரான்ஸ்பர் நிறுவனத்தில் சம்பளபணத்தை மூக்காயி பெயருக்கு பணமாற்றம் செய்வார். விஸ்வநாதன் சிங்கப்பூரிலிந்து ஒரு முறை மட்டும் தனது கிராமத்திற்கு வந்து சென்றார். நானும், விஸ்வநாதனும் வெஸ்டர்ன் மணி டிரான்ஸ்பர் மூலம் பணபரிமாற்றம் செய்வதற்கு எங்களுக்கு தனித்தனியாக ரசீது பெற்றுக்கொள்வோம். மூக்காயி எந்த நபர் மூலம் எவ்வளவு பணம் கொடுத்து கிரையம் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அதேபோல் மூக்காயி பெயருக்கு என்னென்ன சொத்துக்கள் கிரையமாக வாங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் உள்ள 1ம் வாதி, மற்றும் 1ம் பிரதிவாதி பெயருக்கு என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்ற விபரம் நான் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை, எனக்கு அது பற்றி தெரியாது. இந்த வழக்கில் உள்ள 4,5 பிரதிவாதிகள் யார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் உள்ள 4ம் பிரதிவாதியின் கணவரான சுப்பையா மகன் லெட்சுமணன் மற்றும் தேவகி, புஷ்பம் ஆகியோர்கள் கருத்தன்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கருத்தன்பட்டியில் இரண்டு ஓட்டுவீடுகள் உள்ளது. இந்த வீடுகள் 1ம் வாதி பெயரில் உள்ளதா அல்லது 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் தனித்தனி வீட்டில் வசித்து வருகிறார்கள். மேற்படி ஓட்டுவீடுகள் கட்டி சுமார் 20 வருடங்கள் இருக்கும். விஸ்வநாதன் இறந்து 10 வருடங்கள் இருக்கும். இறந்துபோன விஸ்வநாதனுக்கு 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் வாரிசு நபர்கள் என்று அரசு சான்றிதழ்கள் எதுவும் பெற்றுள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் உள்ள சொத்து மற்றும் ஓட்டுவீடுகள் மற்றும் இடங்கள் 1,2 வாதிகள் மற்றும் 1

முதல் 3 பிரதிவாதிகளின் பெயரில் அரசு கணக்குகளில் விபரங்கள் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கினை பொறுத்து விஸ்வநாதனை எனக்கு தெரியாது என்றும் 1ம் வாதியின் வேண்டுகோளுக்கிணங்க இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:</u>

மூக்காயிக்கு ஆண்வாரிசு இல்லாததால் தான் மூக்காயி சம்மதத்தின் பேரில் இந்த வழக்கில் வாதியான பூங்கோதைக்கு விஸ்வநாதனை திருமணம் செய்து வைத்துள்ளார். நான் 1997ல் சிங்கப்பூரில் பணிபுரியும் போது அங்கிருந்து உண்டியல் பணத்திற்கு ரசீது எதுவும் கொடுக்கப்படவில்லை.

<u>குறுக்குவிசாரணை:</u>

மூக்காயிக்கு ஆண்வாரிசு இல்லாததால் விஸ்வநாதன் வலுக்கட்டாயமாக மனைவியின் சகோதரி பூங்கோதையை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி உண்டியல் பணம் கொடுப்பது சம்மந்தமாக எவ்வளவு பணம் கொடுத்துவிடுகிறோம் என்பதினை தொலைபேசி மூலம் தெரிவித்துவிடுவோம். மேற்படி உண்டியல் பணத்திற்கு சிங்கப்பூர் நாட்டை பொறுத்து வருமானவரி பிடித்தம் செய்வார்களா என்றால் நாட்டில் தெரியாமல் அனுப்பக்கூடிய பணமாகும். விஸ்வநாதன் உண்டியல் பணம் எதுவும் கொடுத்துவிடவில்லை என்றும், விஸ்வநாதன் குடும்பத்திற்கு உதவி செய்யும் நோக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>1,2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>